சொல்லியிருக்கிறேன். புவனேஸ்வரி என்பவரின் குடும்பம் தாக்கப்பட்டதாக (குறுக்கீடு) அதுதான் 9.40 மணிக்குக் கொடுத்தீர்கள். 9½ மணிக்குள் கொடுத்திருக்க வேண்டும். அதனால் நாளை அது எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததைத்தான் நான் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? (குறுக்கீடு) 9.40க்குக் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்குத்தான் நான் பதில் சொல்கிறேன். நாளை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டீர்கள். பிறகு அதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு)

திரு இளம்வழுதி: தலைவர் அவர்களே, 1 மணிக்கு முன்னால் கொடுத்தாலும் அரை மணிக்கு முன்னால் கொடுத்தாலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இதுபோல் எடுத்துக்கொள்கிற அளவுக்கு நிலையில் இருந்தால் எடுத்துக் கொள்வேன். நிராகரிக்க வேண்டியதாக இருந்தால் நிராகரித்து விடுவேன். (குறுக்கீடு) அதற்குத்தான் அரை மணி நேரம் முன்னதாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) விதி 55-ல் கொடுத்தால் 7 நாள் கழித்துத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இதை நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அதற்காக 9.40 க்குக் கொடுத்தால் எடுத்துக் கொள்ள முடியாது. விதி அப்படி இருக்கிறது. அரை மணிக்கு முன்னர் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) அனுமதி மறுத்தால் என்ன செய்யமுடியும்? நான் இதற்கு அனுமதி மறுக்கவில்லை. அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடு) 9.40க்குக் கொடுத்ததால்தான் இன்றைக்கு எடுக்கவில்லை, நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) திரு. எஸ். ஆண்டித்தேவர்.

முற்பகல் 11-25

5. அறிவிப்புகள்

(அ) திரு. சி. ஞானசேகரன் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டது குறித்து

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இதற்கு முன்னால் இரண்டு முறை வெளியேற்றப் பட்டிருக்கிறார். இன்றும் நீங்கள் வெளியேற்றி இருக்கிறீர்கள். ஆகவே, நம்முடைய விதியின்படி அவர்மீது நடவடிக்கையெடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஞானசேகரன் மட்டுமல்ல, இன்னும் சில 2, 3 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நான் என்னுடைய பழைய ஆணையைப் பார்க்கச் சொல்லி இருக்கிறேன். திரு. ஞானசேகரன், பேரவை விதி 120-ன்படி இந்தப் பேரவைக் கூட்டத்தின் எஞ்சிய நாட்களுக்கு அவையை விட்டு விலக்கி வைக்கப்படுகிறார். அதைப்போல இன்னும் 2, 3. உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்து பின்னர் அறிவிப்பு வெளியிடுவேன்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொருவராக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் இவ்வளவு முறைகேடாக நடந்தால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) நான் பேரவையை நடத்த வேண்டும். (குறுக்கீடு) நான் பேரவையை நடத்த வேண்டும், (குறுக்கீடு) வேறு வழியில்லை. பிறகு என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரை ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் உங்களுடைய நடவடிக்கையில் குற்றம் கண்டுபிடிக்கிற வகையில், அரை மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுத்ததற்கு அனுமதித்தீர்களா? இதை அனுமதிக்கமாட்டீர்களா என்று கேட்பது முறையற்ற செயல். மாண்புமிகு பேரவைத் தலைவரை முதலில் மதித்து மாண்புமிகு உறுப்பினர் நடந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், இதுபற்றி நான் சொல்லி இருக்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(அ) வருவாய்த் துறை ஊழியர்கள் வேலைநிறுத்தப் பிரச்சினை குறித்து-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வருவாய்த் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் பற்றிய பிரச்சினை குறித்து திரு. ஜி. பழனிசாமி, திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு இரா. தாமரைக்கனி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை அவையிலே எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 32,000-க்கும் மேற்பட்ட வருவாய்த் துறை ஊழியர்கள், கடைநிலை ஊழியர்கள் சுமார் இரண்டு மாதகாலமாக